சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **01 / 2017**

பெயர்: இளையராணி வா.சா. 1 தேதி **12.02.2026**

ஆறாவது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. பிராதில் என்ன பரிகாரம் குறிப்பிட்டு கூறியுள்ளேன் என்றால் சொத்து கேட்டு பரிகாரம் கூறியுள்ளேன். எனக்கு எத்தனை பாகம் என்று குறிப்பிட்டு கேட்டுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரனம் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண். 708 ல் 3C , சர்வே எண். 713 (1,2) . மேற்படி சொத்தின் விஸ்தீரனம் எவ்வளவு என்றால் 3 3/4 ஏக்கர். மேற்படி சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு பூர்விக வகையில் பாத்தியப்பட்டதா என்றால் பூர்விக வகையில் பாத்தியப்பட்டது தான். அதற்கான ஆவணங்கள் உண்டா என்றால் இல்லை. வழக்கு சொத்தை தவிர முதல் பிரதிவாதியின் இதர சொத்துக்கள் அனைத்தையும் இதுவரை பாகம் பிரிக்காமல் எனது உடன் பிறந்த சகோதரான அழகுராஜா என்பவர் அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களை பொறுத்து நானோ, எனது தந்தையின் முதல் தாரத்து வாரிசுகளோ எவ்வித உரிமையும் கோரவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி சொத்துக்களில் நானும், பாகம் கோரவில்லை என்றால் அது கூட்டாக தான் உள்ளது. மேற்படி சொத்தை எனது அண்ணன் தான் அனுபவம் செய்துவருகிறார். என்னுடைய திருமணம் காதல் திருமணம்.

2. எனது திருமணத்திற்கு பின்னிட்டு தான் வா.சா.ஆ.3 ஆவணம் ஏற்படுத்தப்பட்டது. எனது திருமணம் 15.07.2009ம் ஆண்டில் நடைபெற்றது. எனக்கும், எனது குடும்பத்தாருக்கும் மேற்படி திருமணத்திற்கு பின்னிட்டு நல்ல உறவு இல்லை என்று சொன்னால் சரியல்ல. அக்காலகட்டத்தில் எனது தகப்பனார் வங்கியில் கடன் பெற்ற சங்கதி தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி எனது தகப்பனார் வழக்கு சொத்து மற்றும்இதர சொத்துக்களை அக்காலகட்டத்தில் வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்றிருந்தார் என்றால் சரியல்ல. மேற்படி சொத்து மற்றும் இதர சொத்துக்களை வங்கியில் (ஓரியண்டல் பேங்க் ஆப் காமர்ஸ் கிளை கரூர் 08.03.2010ம் தேதி) அடமானம் வைக்கப்பட்டியிருந்தாலும், மேற்படி கடனை கட்டுவதற்காக ஆறாவது பிரதிவாதியிடம் கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மொத்த கிரைய தொகையான ரூ.4,50,000/-த்தையும், முதல் பிரதிவாதியான எனது தகப்பனார் மற்றும் என்னுடைய சகோதர, சகோதரிகள் அனைவரும் கையொப்பம் இட்டும் அந்த ஆவணத்தில் நானும் கையொப்பம் செய்து மேற்படி கிரைய தொகை முழுவதையும் எனக்கு மட்டும் என

கேட்டதால் அதை மற்ற பிரதிவாதிகள் மறுத்தாலும் அந்த ஆவணத்தில் நான் பதிவு அலுவலகத்திற்கு வெளியே கையொப்பம் செய்துவிட்டு, பதிவு அலுவலகத்திற்குள் கையொப்பம் செய்ய மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

3. ஆதலால் தான் மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எனது கையொப்பம் செய்யப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது. முறையாக நான் பாகம் கேட்டியிருந்தேன் என்றால் முழு சொத்தையும் கேட்டு இருப்பேன் என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதிக்கும், ஆறாவது பிரதிவாதியின் தந்தைக்கும் இடையே வேறு ஒரு சொத்தை பொறுத்து குளித்தலை மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் அ.வ. 242/2016 என வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்துவருகிறது என்றால் சரிதான். மேற்படி நீதிமன்றத்தில் அ.வ.12/2017 என ராமசாமி எதிர் நல்லபெருமாள் (முதல் பிரதிவாதி) வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். நான் மேற்படியார்களை பழிவாங்கவேண்டும் என்பதற்காக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இ தர சொத்துக்கள் உள்ள நிலையில் இந்த வழக்கு சொத்தை பொறுத்து மட்டும் நான் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. இதர சொத்துக்கள் அனைத்தையும் எனது சகோதரரே வைத்துள்ள நிலையில் தாவா சொத்துக்களை பொறுத்து நான் உரிமை மற்றும் பாகம் கோர எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

sd/- (ஈ. முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.